# 5

# பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும்

TML 005

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



## எல்லோரும் பெண்கள். ஒரே குடும்பச் சட்டம்.

அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

கனடாவில் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதிலும், அவர்கள் எவ்வாறு பராமரிக்கப்படுதல் வேண்டும் என்று தீர்மானம் எடுப்பதிலும், இரண்டு பெற்றோருக்கும் ஒரேவிதமான உரிமைகள் உண்டு என்று சட்டம் கூறுகின்றது.

நீங்களும் உங்கள் குழந்தையின் மற்றைய பெற்றாரும் பிரிந்து போகிறீர்கள் அல்லது ஒன்றாகக் கூடிச் சீவிப்பதில்லை என்றால் உங்கள் பிள்ளையின் அன்றாட வாழ்வுபற்றியும் அவர் எங்கே வாழ்ந்துவருவார் என்பது பற்றியும் நீங்கள் திட்டங்கள் வகுக்கவேண்டும். இவ்வாறான ஏற்பாடுகளை நீங்கள் சட்டத்தரணிகளின் உதவியுடனே அல்லது அது இல்லாமலோ செய்ய முடியும்.

இவ்விடயத்தில் நீங்கள் இணக்கம் காணவில்லை என்றால் உங்களில் யாரோ ஒருவர் குழந்தையின் **கட்டுக்காப்பு** (Custody) அல்லது **அணுகல் உரிமை** (Access) பற்றிய ஒரு கட்டளையைப் பெறுவதற்கு நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். கட்டுக்காப்பு அல்லது அணுகல் உரிமைக்கான விண்ணப்பத்தினை உங்கள் பிள்ளை வழக்கமாக சீவிக்கின்ற மாநகரம் அல்லது நகரத்திலேயே நீங்கள் செய்ய வேண்டும். பெற்றோரில் யாராவது ஒருவரின் நிலைமையில் நிறைய மாற்றங்கள் ஏற்படுமானால் கட்டுக்காப்பு அல்லது அணுகல் உரிமை தொடர்பாக விதிக்கப்படும் கட்டளைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.

## கட்டுக்காப்பு என்றால் என்ன?

கட்டுக்காப்பு என்றால் பிள்ளை எங்கே வாழுகிறது என்பது பற்றியது அல்ல. அது வதிவிடம் (residency) எனப்படும். **கட்டுக்காப்பு** என்றால் பிள்ளையின் வாழ்க்கை பற்றி **முடிவுகளை எடுப்பதற்குப்** பொறுப்பாக உள்ள பெற்றார் யார் என்பதைப் பற்றியதாகும்.

கட்டுக்காப்பில் இரண்டு வகைகள் உண்டு:

1. உங்களிடம் **தனித்த கட்டுக்காப்பு** அல்லது **கட்டுக்காப்பு** (sole custody or custody) இருக்குமானால் பிள்ளையின் வாழ்க்கையைப் பற்றிய எல்லாவற்றையும் தீர்மானிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு. **நீங்களாகவே** உங்கள் பிள்ளையின் ஆரோக்கியம், கல்வி, சமயப் போதனை போன்றவை பற்றி முடிவுகள் எடுக்கலாம். தனித்த கட்டுக்காப்பு அல்லது கட்டுக்காப்பு உங்களுக்கு இருக்குமானால் நீங்கள் பிள்ளையின் **கட்டுக்காப்புப் பெற்றார்** (custodial parent) என அழைக்கப்படுவீர்கள். மற்றைய பெற்றார் **கட்டுக்காப்பற்ற பெற்றார்** (non-custodial parent) என அழைக்கப்படுவார்.

   தனித்த கட்டுக்காப்பு உங்களுக்கு இருந்தால், பிள்ளை சம்பந்தமாக நீங்கள் செய்யும் தீர்மானங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் உரிமை மற்றைய பெற்றாருக்கு வழக்கமாக உண்டு. ஆனால் நீங்கள் தீர்மானங்களை எடுக்க முன்பு அதுபற்றி அவருடன் கதைக்க வேண்டும் என்ற நியதி இல்லை.

2. உங்களுக்குக் கூட்டுமுறைக் கட்டுக்காப்பு (joint custody) இருக்குமானால், பிள்ளையின் வாழ்வு சம்பந்தமாக எடுக்கும் சகல பிரதான முடிவுகளையும் தீர்மானிப்பதில் நீங்களும் பிள்ளையின் மற்றைய பெற்றாரும் சேர்ந்து பங்குபற்ற வேண்டும்.

சில சமயங்களில் தம் இருவருக்கும் **பங்கீட்டுக் கட்டுக்காப்பு** (shared custody) இருப்பதாகப் பெற்றோர் கூறுவதுண்டு. பிள்ளை சம்பந்தமான தீர்மானங்களில் நீங்கள் இருவரும் பங்கெடுக்கிறீர்கள் என்பது இதன் அர்த்தமல்ல. இதன் அர்த்தம், பிள்ளை தனது நேரத்தில் ஒரே அளவான காலத்தை ஒவ்வொரு பெற்றாருடனும் கழிக்கிறது என்பதாகும். இது **பங்கீட்டு பெற்றோரியல் முறை** (shared parenting) என்றும் அழைக்கப்படுகிறது.

## பிள்ளைகள் எங்கே வசிப்பது

பெரும்பாலான வேளைகளில், பிள்ளைகள் ஒரு பெற்றாருடன் கூடுதலாகவும் மற்றப் பெற்றாருடன் குறைவாகவும் நேரத்தைக் கழிக்கின்றனர். இவ்வாறு நிகழும்போது, பிள்ளை கூடுதலான நேரத்தைச் செலவழிக்கும் வீடு பிள்ளையின் **பிரதம வதிவிடம்** (primary residence) எனப்படும். பிள்ளைப் பராமரிப்பின் பெரும்பகுதியைச் செய்யும் பெற்றார் **பிரதம பராமரிப்பு வழங்குபவர்** (primary caregiver) என அழைக்கப்படுகிறார். தம்பதியினரின் பிரிவுக்கு முன்பும் பின்பும் பிரதம பராமரிப்பு வழங்குபவராக இருக்கும் பெற்றாருடனேயே பிள்ளைகள் வசிக்க வேண்டும் என்று வழக்கமாக நீதிமன்றம் தீர்மானிக்கும்.

## அணுகல் உரிமை என்றால் என்ன?

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு பிள்ளையின் சிறந்த நலன்களைப் பொறுத்த வரையில் **இரண்டு** பெற்றோருடனும் பிள்ளை முடிந்த அளவு அதிகமான தொடர்பினை வைத்திருப்பது நல்லது என்று நீதிமன்றம் நம்புகிறது. ஒரு பெற்றாருடன் பிள்ளை வசிக்காவிடின், அந்தப் பெற்றாருக்கு பிள்ளையுடன் நேரத்தைச் செலவிடுவதற்கான உரிமை வழமையாக இருக்கும். அவர்களுக்கு வழமையாகப் பிள்ளையின் ஆரோக்கியம், நலம், மற்றும் கல்வி பற்றி அறியவும் உரிமை இருக்கும். இது **அணுகல் உரிமை** (access) என அழைக்கப்படும். பிள்ளைகளுடன் பெருமளவு நேரத்தைச் செலவிட்டிராத பெற்றாருக்கும் வழக்கமாக அணுகல் உரிமை கிடைக்கப்பெறும்.

பிள்ளையினது மற்றப் பெற்றாருடன் நீங்கள் இலகுவாகவும் நேர்மையாகவும் கதைக்கக்கூடியதாக இருந்தால், அணுகல் உரிமை பற்றிய முறைசாரா ஒழுங்குகளை நீங்கள் செய்து கொள்ளலாம். மற்றப் பெற்றாருடன் ஒத்துப் போகாத நிலை அல்லது உறவுமுறை துர்ப்பிரயோகத் தன்மை உடையதாக இருந்திருந்தால், அணுகல் உரிமை பற்றிய ஒழுங்குகளைச் செய்ய நீதிமன்றத்திற்குச் செல்லுவது நல்லதாகும்.

## நீதிமன்றத்துக்குச் சென்றால் எதனை எதிர்பார்க்கலாம்

அணுகல் உரிமைக் கட்டளைகளில் பல்வேறு வகைகள் உள்ளன. அவற்றில் சில மிகவும் திறந்தனவாக இருக்கும் மற்றவை மிகக் குறிப்பாக இருக்கும். அணுகல் உரிமை பற்றிய ஒரு நீதிமன்றக் கட்டளை உங்களையும் பிள்ளையினது மற்றப் பெற்றாரையும் உங்கள் எல்லோருக்கும் பொருத்தமான ஒழுங்குகளை நீங்களே செய்ய அனுமதிக்கக் கூடும். இது **"வேண்டுகோளின் பெயரில் நியாயமானதும் பெருந்தன்மையுள்ளதுமான அணுகல் உரிமை"** (reasonable and generous access on request) என அழைக்கப்படும். உங்கள் பிள்ளையினது மற்றப் பெற்றாருடன் உங்களுக்கு சுமுகமான உறவு இல்லாவிடில், அணுகல் உரிமை வருகைகள் பற்றிய திகதிகள் மற்றும் நேரங்களை நிறுவும் கட்டளை ஒன்றைப் பெறுவது நல்லதாகும். இதன் மூலம் அணுகல் உரிமை வருகைகளின் விபரங்கள் பற்றி நீங்கள் எப்போதும் மற்றப் பெற்றாருடன் கதைக்க வேண்டிய தேவை ஏற்பட மாட்டாது.

சிலவேளைகளில் நீதிமன்றம் ஒரு **படிப்படியான நேர அளவீட்டு முறையை** (graduated schedule) நிறுவக்கூடும். இதன் அர்த்தம் பெற்றாருக்கு ஆம்பத்தில் குறைந்த அளவிலான அணுகல் உரிமையும் ஆனால் காலப்போக்கில் அதிக அளவிலும் இருக்கும் என்பதாகும். ஒரு படிப்படியான நேரஅளவீட்டு முறை, உங்கள் பிள்ளை அணுகல் உரிமை கொண்ட பெற்றாரைத் தெரிந்து கொள்ளவும் நம்புவதற்குமான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது. ஒரு பிள்ளை அணுகல் உரிமைப் பெற்றாருடன் பெருமளவு நேரத்தைச் செலவிட்டிருக்காவிடில் அல்லது உங்கள் பிள்ளை மிக இளமையாக இருக்கும் போது நீங்கள் பிரிந்திருந்தால் நீதிமன்றம் படிப்படியான நேர அளவீட்டு முறையைப் பயன்படுத்தக் கூடும்.

அணுகல் உரிமைப் பெற்றாருடன் பிள்ளையின் பாதுகாப்பு பற்றிய கவலை நீதிமன்றத்துக்கு இருப்பின் அல்லது அணுகல் உரிமைப் பெற்றாரும் பிள்ளையும் ஒன்றாக அதிக நேரம் கழித்த முன் அனுபவம் இல்லை என்றால் மேற்பார்வையுடனான அணுகல் உரிமைக்கு நீதிமன்றம் கட்டளையிடக்கூடும். இதன் அர்த்தம் அந்தப் பெற்றார் பிள்ளையுடன் தனியாக இருக்க முடியாது என்பதாகும். இந்த வருகைகளை மேற்பார்வை செய்வது குடும்ப **அங்கத்தினர்** ஒருவராக இருக்கலாம் அல்லது நீதிமன்றம் தெரிவு செய்த ஒருவராக இருக்கலாம். மேற்பார்வையுடனான வருகைகள், அலுவலர்கள் கண்காணிப்புச் செய்கின்ற மேற்பார்வையுடனான அணுகல் உரிமை நிலையங்கள் (supervised access centres) என்னும் இடங்களிலும் நடைபெறலாம்.

நீங்களும் மற்றைய பெற்றாரும் சந்தித்து பிள்ளைகளைக் கையளிக்கும் நேரத்தில் ஏற்படும் முரண்பாடு அல்லது பாதுகாப்பு சம்பந்தமான கவலைகள் நீதிமன்றத்துக்கு ஏற்படுமானால் மேற்பார்வையுடனான அணுகல் உரிமைப் பரிமாற்றத்துக்கும் நீதிமன்றம் உத்தரவிட முடியும். மேற்பார்வையுடனான அணுகல் உரிமைப் பரிமாற்றங்கள் மேற்பார்வையுடனான அணுகல் உரிமை நிலையம் ஒன்றில் இடம்பெறும். இங்குள்ள பணியாளர்கள் நீங்களும் உங்கள் துணைவரும் ஒருவருடன் ஒருவர் நேரடியாகத் தொடர்பு கொள்ளாதவாறு உங்களுக்கு இடையே பிள்ளைகள் கையளிக்கப்படுவதற்கு உதவுவர்.

மிக அரிதான சந்தர்ப்பங்களில், ஒரு பெற்றாருக்கு தமது பிள்ளைக்கான **அணுகல் உரிமை மறுக்கப்படலாம்.** இது அந்தப் பெற்றாரால் பிள்ளை துன்புறுத்தப்படலாம் என நீதிமன்றம் நம்பும் வேளைகளில் மட்டுமே நடைபெறும்.

## கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமைக் கட்டளைகளைப் பின்பற்றுல்

கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை பற்றிய ஒரு ஒப்பந்தம் அல்லது **கட்டளை** ஒன்று உங்களுக்கு இருப்பின், நீங்கள் அதனைக் கட்டாயம் பின்பற்றியே ஆக வேண்டும். நீங்கள் அல்லது பிள்ளைகளினது மற்றப் பெற்றார் கட்டுக்காப்புக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கான உதவியைப் போலிசாரிடம் கோர முடியும். நீங்கள் கட்டளையில் கூறப்பட்டுள்ளதன் படி உங்கள் பிள்ளைகளின் மற்றப் பெற்றாரைப் பார்வை இட மறுப்புத் தெரிவித்தால் அவர் நீதிமன்றத்திடம் கட்டுக்காப்பினைத் தனக்கு மாற்றும்படி கேட்கலாம். பிள்ளைகளினது பாதுகாப்புப் பற்றிய பயம் உங்களுக்கு இருக்குமேயானல் நீங்கள் அணுகல் உரிமையை மறுக்க சட்டம் இடமளிக்கின்றது. **அணுகல் உரிமையை நீங்கள் மறுப்பதாயின், உடனடியாக சட்ட உதவியை நாடுங்கள்.**

சிலவேளைகளில், ஒரு பெற்றார் அணுகல் உரிமைமைக்காகப் போராடி விட்டு கட்டளையில் குறிப்பிட்ட நேரப் பிரகாரம் பிள்ளைகளைப் பார்க்க வராது இருக்கலாம். இது பிள்ளைகளுக்கு குழப்பத்தினை ஏற்படுத்தலாம் எனினும், துரதிர்ஷ்டவசமாக, தமக்கு வழங்கப்பட்ட நேரத்தினைப் பயன்படுத்துமாறு அணுகல் உரிமைப் பெற்றாரை நிர்ப்பந்திக்கும் வகையில் சட்டம் எதனையும் செய்ய முடியாது உள்ளது. இது ஒழுங்காக நடைபெறுமானால், தவறவிடப்பட்ட அல்லது குறுகிய கால வருகைகள் பற்றிய விபரத்தைக் குறித்து வையுங்கள். அணுகல் உரிமைக் கட்டளையை மாற்றுவதற்கு நீதிமன்றத்திடம் மீண்டும் சென்று கேட்பதற்கு இந்தத் தகவலை நீங்கள் பயன்படுத்தக் கூடியதாக இருக்கலாம்.

## கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை பற்றி நீதிமன்றங்கள் எவ்வாறு தீர்மானமெடுக்கின்றன?

கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை பற்றி நீதிமன்றங்கள் தீர்மானங்களை எடுக்கும் போது, அவை **பிள்ளையினது சிறந்த நலன்கள்** (best interests of the child) பற்றிக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இது ஒரு கண்டிப்பான சட்டபூர்வ வரைவிலக்கணம் ஆகும். பின்வருவனவற்றை நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது:

- வீட்டுச்சூழலில் துர்ப்பிரயோகம் ஏதும் இருந்துள்ளதா?
- பிள்ளைக்கும் ஒவ்வொரு பெற்றாருக்கும் இடையிலான உறவுமுறை எவ்வளவு தூரம் அன்பானது?
- பிள்ளைக்கும் அணுகல் உரிமை கோரும் ஒவ்வொரு பெற்றாருக்கும் இடையில் உள்ள உணர்வு பூர்வமான பாசப் பிணைப்பு எவ்வளவு வலுவானது?
- நிலையான சூழலில் பிள்ளை எவ்வளவு காலம் வாழ்ந்துள்ளது?
- பிள்ளையினது பராமரிப்பு மற்றும் வளர்த்தெடுப்பில் ஒவ்வொரு பெற்றாரும் கொண்டுள்ள திட்டங்கள் யாவை?
- ஒவ்வொரு நபரும் எவ்வளவு நல்லமுறையில் பெற்றாராயிருக்க முடியும்?
- பிள்ளை விரும்புவது என்ன?

குடும்பச் சட்ட நீதிமன்றங்கள் ஏற்கனவே உள்ள ஒழுங்குகளையும் பார்வையிடுகின்றன. இது **நடைமுறை நிலை** (status quo) என அழைக்கப்படுகின்றது. பிள்ளையினது வாழிட ஒழுங்குமுறை நன்கு செயற்படுவதாக இருப்பின், பெரிய அளவிலான மாற்றங்களை நீதிமன்றம் வழமையாகச் செய்ய மாட்டாது.

கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமைக்குப் பெற்றார் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்பதில்லை. அதற்கு **எவரும்** விண்ணப்பிக்கலாம் என்று சட்டம் கூறுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் விரிவுபடுத்தப்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் உ-ம்: பேரன் பேத்தியர், மாற்றாந்தாய் தகப்பன் அல்லது அத்தை-சித்திமாரும் நீதிமன்றத்தில் இதனைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கின்றனர். எனினும், யார் விண்ணப்பிக்கின்றனர் என்பதைப் பொறுத்து அல்லாது, பிள்ளையினது சிறந்த நலன்களையே நீதிமன்றம் கருத்தில் கொள்ளும்.

## பிள்ளைகளுடன் இடம் பெயர்தல்

பெற்றோர் ஒன்றாகக் கூடி வாழாத சந்தர்ப்பங்களில் எழும் ஒரு கஷ்டமான விடயம் எதுவெனில், பிள்ளைகளுடன் கூட வாழும் பெற்றார் அப்பிள்ளைகளை நகரத்திற்கு வெளியே, அல்லது சில சந்தர்ப்பங்களில் மாகாணத்திற்கு வெளியே அல்லது நாட்டிற்கு வெளியே கூட, இடம் மாற்ற முடியுமா என்பதாகும். நீங்கள் ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவுக்காக அல்லது வேலை வாய்ப்பினுக்காக இடம் மாற விரும்பக்கூடும். இத்தகைய இடமாற்றம் உங்கள் பிள்ளைகளின் மற்றைய பெற்றாருக்கு ஒழுங்கான முறையில் பிள்ளைகளைச் சந்திப்பதனைக் கடினமாக்கக் கூடும். இடம் மாறும் தூரத்தினைப் பொறுத்து, செலவும் ஒரு பிரச்சினை விடயமாக மாறலாம்.

பிள்ளைகள் தொடர்பான எல்லா முடிவுகளைப் போன்றும், இடமாற்றத்திற்கான அனுமதியை நீதிமன்றம் தீர்மானிப்பது **பிள்ளைகளினது சிறந்த நலன்களின்** அடிப்படையில் ஆகும். நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் இடம் மாற அனுமதிக்கப்பட்டால், நீதிமன்றம் அணுகல் உரிமை ஒழுங்குகளில் அணுகல் உரிமை கொண்ட பெற்றார் நீண்ட நேரம் சந்திப்பதற்கு அனுமதிக்கக் கூடும். அல்லது மற்றப் பெற்றாருக்கு அணுகல் உரிமை தொடர்பாகக் கூடிய பயணச் செலவுகள் இருப்பதன் காரணமாக நீங்கள் பிள்ளைகளுக்கென பெறும் ஆதார உதவித்தொகைப் பணத்தினைக் குறைக்கக்கூடும்.

## பிள்ளைகளுடன் பிரயாணம் செய்தல்

அநேகமான சந்தர்ப்பங்களில், **மற்றப் பெற்றாரின் அனுமதி இன்றி ஒரு பெற்றார் பிள்ளையைக் கனடாவுக்கு வெளியே கூட்டிச் செல்ல முடியாது.** நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் பயணம் செல்வதாயின், கட்டுக்காப்புக் கட்டளை மற்றும் மற்றப் பெற்றார் கனடாவுக்கு வெளியே பிள்ளைகள் செல்ல அனுமதி வழங்கும் கடிதம் என்பவற்றை நீங்கள் வைத்திருக்க வேண்டும். இந்தக் கடிதம் ஒரு வழக்கறிஞரால் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். நீங்கள் எல்லையைக் கடக்கும் போது, எல்லைக் காவலர்கள் பிள்ளைகளினது மற்றப் பெற்றாருக்கு அந்தப் பயணம் பற்றித் தெரிந்திருப்பது மற்றும் அவர் அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது பற்றி உங்களிடம் கேட்பதை நீங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

## பிள்ளை கடத்துதல்

சிலவேளைகளில், ஒரு பெற்றார் பிள்ளைகளை மற்றப் பெற்றாரின் அனுமதியின்றி கனடாவுக்கு வெளியே அழைத்துச் செல்வார். இது மிகவும் பாரதூரமானதாகும், ஏனெனில் கனடாவுக்கு வெளியே சென்றுவிட்டால் பின்னர் பிள்ளைகளை மீண்டும் பெறுவது என்பது கடினமாகி விடக்கூடும். இது **பிள்ளை கடத்துதல்** (child abduction) என்று அழைக்கப்படும். பிள்ளை கடத்துதல் கனடாவில் ஒரு பாரதூரமான குற்றச்செயல் ஆகும்.

கனடாவைவிட்டு சட்டவிரோதமாக உங்கள் பிள்ளைகள் எப்போதும் செல்லாது இருக்க முற்றுமுழுதாக ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும், நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கவெனச் செய்யக் கூடிய சில விடயங்கள் உள்ளன. உங்கள் கட்டுக்காப்புக் கட்டளை அல்லது ஒப்பந்தம் பின்வருமாறு இருப்பதை உறுதிப்படுத்துங்கள்:

- இயலுமனானவரை தெளிவாகவும் விபரமாகவும் இருப்பது
- பிள்ளைகள் கனடாவை விட்டு வெளியில் பயணம் செய்ய முடியாது என்று குறிப்பாகச் சொல்லி இருப்பது

பிள்ளைகளது கடவுச்சீட்டுகள் அல்லது அணுகல் உரிமை கொண்ட பெற்றாரின் கடவுச்சீட்டு உங்கள் பாதுகாப்பில் அல்லது நீதிமன்றத்தின் பாதுகாப்பில் இருக்கும் எனவும் கட்டளையில் மேலும் குறிப்பிடப்பட்டு இருக்கலாம்.

உங்களது பிள்ளைகளைத் திரும்பப் பெற உங்களுக்கு உதவக்கூடிய முக்கியமான சட்டம் *சர்வதேச பிள்ளை கடத்துதலின் குடிமுறை அம்சங்களுக்கான ஹேக் சட்ட சாசனம் (Hague Convention on the Civil Aspects of International Child Abduction)* ஆகும். இது 75 நாடுகள் கைச்சாத்திட்டுள்ள ஒரு சர்வதேச பிரகடனம் ஆகும். இதில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் தாம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் சட்ட விரோதமாக இடம் மாற்றப்பட்டுள்ள பிள்ளைகளைக் கண்டுபிடித்து திரும்ப அனுப்ப ஒன்றோடு ஒன்று சேர்ந்து செயற்பட சம்மதம் தெரிவித்துள்ளன.

இந்த சாசனத்தில் கையெழுத்திடாத நாடொன்றுக்கு உங்கள் பிள்ளை கொண்டு செல்லப்பட்டிருந்தால், கனடாவுக்கு உங்கள் பிள்ளையைத் திரும்பவும் கொண்டுவருவது அதிக சிரமமான விடயமாக இருக்கும். இது நடைபெற்றால், உங்கள் பிள்ளை கொண்டு செல்லப்பட்ட நாட்டின் சட்டங்களின் அடிப்படையில் நீங்கள் கட்டுக்காப்புக்காகப் போராடலாம். கடத்தல்காரர் மற்றும் அவரது குடும்பத்தினருடன் நீங்கள் பேசி ஒரு முடிவுக்கு வருவதற்கும் முயற்சிக்கலாம்.

சர்வதேச கடத்துதலைத் தடுத்தல் எப்படி என்பது பற்றி மேலதிக விபரம் பெற *சர்வதேச பிள்ளைக் கடத்துதல்: பெற்றோருக்கான கையேடு (International Child Abductions: A Manual for Parents)* என்ற புத்தகத்தை வாசியுங்கள். இந்தச் சிற்றேடு கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளது. உங்கள் பிள்ளை உங்களது அனுமதியின்றி கனடாவுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது. நீங்கள் இதன் ஒரு பிரதியை Foreign Affairs Canada அமைப்பில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது இவ்வேட்டினை கணினியில் வாசிப்பதற்கு ாவவி: www.voyage.gc.ca என்னும் இணையத் தளத்தில் முதலில் "Children and Travel" என்பதிலும் பின்னர் "Custody and Abduction" என்பதிலும் அழுத்திக் கொள்ளுங்கள்.

*உங்கள் பிள்ளை கனடாவைவிட்டு வெளியே கூட்டிச்செல்லப்பட்டு இருந்தால் என்ன செய்வது*

நாட்டைவிட்டு உங்கள் பிள்ளை கூட்டிச் செல்லப்பட்டுள்ளதாக நீங்கள் நினைத்தால்:

- உடனடியாக நீங்கள் **காவல்துறையினரை அழைக்க வேண்டும்.** காவல்துறையினர் மற்றும் பெற்றோர் உங்கள் பிள்ளையைக் கூட்டிச் செல்லக்கூடிய நாட்டின் எல்லைக் காவலர்களுக்கு ஓர் எச்சரிக்கையை அனுப்புவார்கள்.
- உடனடியாக 1-800-387-3124 அல்லது 1-800-267-6788 என்னும் இலக்கத்தில் **தூதரக அலுவல்கள் பணியகத்தை** (Consular Affairs Bureau) **அழையுங்கள்**. அவர்களது அலுவலகம் 7 நாட்களும் 24 மணிநேரமும் திறந்திருக்கும்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. **பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)**
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*


flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.